# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF MAHILA COURT, PERAMBALUR.

Calendar
Miscellaneous

Preliminary Register
**Sessions**

**Sessions Case No. : 3 /2022**

**Deposition of witness for**

| | | | |
|---|---|---|---|
| **Prosecution** | : | **P.W.** | **: 5** |
| Defence | : | D.W. | : |
| Court | : | C.W. | : |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கார்த்திக் | வயது | : | 25 |
| த/பெ. | : | கந்தசாமி | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | : | ஓலைப்பாடி | | : | |
| வட்டம் | : | குன்னம் | | : | |
| மாவட்டம் | : | பெரம்பலூர் | | | |

நான் என்ன கூறுகிறேனோ, அதுவே உண்மை என்றும், அவை அனைத்தும் உண்மையென்றும் உண்மையைத் தவிர வேறு இல்லை என்றும் கடவுளின்பெயரிலும் என்னுடைய மனசாட்சிக்குட்பட்டும் உறுதிமொழி ஏற்கிறேன்.

Starting Time: 3.35 PM Date: 27.10.2022

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் தற்போது ஓலைப்பாடியில் வசித்து வருகிறேன். நான் டிப்ளமா படித்துவிட்டு விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் என் அக்கா செல்வியின் கணவர் ஆவார். என் அம்மா , அப்பாவிற்கு ஐந்து மகள்கள், நான் ஒரு மகன். என் மூன்றாவது அக்கா செல்வியை ஆஜர் எதிரி சந்திரசேகருக்கு சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் செய்துக்கொடுத்தோம். என் அக்கா செல்விக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். என் அக்கா செல்வி திருமணம் முடிந்த பின்பு ஓலைப்பாடியில் வாடகை வீட்டில் அவரது கணவர், பிள்ளைகள் மற்றும் ஆஜர் எதிரியின் பாட்டி வசித்து வந்தார். ஆஜர் எதிரி சென்னையில் கூலி வேலை செய்து வருகிறார். ஆஜர் எதிரி

இரண்டு அல்லது மூன்று மாதத்திற்கு ஒருமுறை சென்னையிலிருந்து ஓலைப்பாடி கிராமத்திற்கு வருவார். ஆஜர் எதிரி சென்னையிலிருந்து ஓலைப்பாடி வரும்போதெல்லாம் என் அக்கா செல்வியிடம் சந்தேகப்பட்டு அடித்து, உதைப்பதையே வாடிக்கையாக செய்து வந்தார். கடந்த 22.07.2018 அன்று ஆஜர் எதிரி சென்னையிலிருந்து ஓலைப்பாடி கிராமத்திற்கு வந்தார். அப்போது என் அக்கா செல்வி எங்கள் வீட்டில் இருந்தார். ஆஜர் எதிரி என் அக்கா செல்வியை அவரது வீட்டிற்கு வருமாறு காலையிலிருந்து கூப்பிட்டு பார்த்தார். செல்வி வர மறுத்துவிட்டார். பின்னர் அன்று மாலை 5.00 மணியளவில் எனது அம்மா புத்திமதிகள் கூறி என் அக்கா செல்வியை எதிரியின் வீட்டிற்கு ஆஜர் எதிரியுடன் அனுப்பி வைத்தார். அதன்பின்னர் என் அக்கா செல்வியின் இரண்டாவது மகன் செல்வக்கண்ணன் தன் அம்மாவுக்கும், அப்பாவிற்கும் சண்டை என்று 23.07.2018 ம் தேதி அதிகாலை 1.00 மணியளவில் எங்கள் வீட்டிற்கு வந்து சொன்னான். நானும், எனது அம்மா, அப்பாவும் ஆஜர் எதிரியின் வீட்டிற்கு சென்றோம். அதன்பின்பு நானும், என் அம்மாவும், அப்பாவும் போனபோது ஆஜர் எதிரி என் அக்கா செல்வியை ஏண்டி தேவடியா இவ்வளவு நேரம் முழித்திருக்கிறாய் எவனுக்காக முழித்திருக்கிறாய் என்று அசிங்கமாக திட்டினார். என் அக்கா செல்வி அவரது வீட்டை விட்டு வெளியே வந்து அவரது வீட்டருகே வரதராஜ் என்பவர் வீடு கட்டுவதற்க்காக அஸ்திவாரம் போட்ட இடத்தில் நின்ற என் அக்கா செல்வியை ஆஜர் எதிரி ஏண்டி தேவடியா எங்கே போயிறாய் நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன் என்று சொல்லிவிட்டு செத்துப்போடி நாயே என்று சொல்லி என் அக்கா செல்வியின் தலைமுடியை பிடித்து அவரது மூக்கில் கையால் குத்தி கீழே தள்ளிவிட்டார். அப்போது என் அக்கா செல்வி கீழே விழுந்தததில் அவருக்கு முகம், தலையில் எல்லாம் இரத்த காயம் ஏற்பட்டது. அதன்பின்பு ஆஜர் எதிரி என்னைக்கு இருந்தாலும் என் கையில் தான் உனக்கு சாவு என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டார். என் அக்கா செல்வி கீழே விழுந்ததில் அவர் சுயநினைவை

இழந்துவிட்டார். அதன்பின்பு என் அக்கா செல்வியை 108 ஆம்புலன்ஸ் மூலம் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றோம். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக திருச்சிராப்பள்ளி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். அதன்பின்னர் என் அம்மாவிடம் போலீசார் மருத்துவமனையிலிருந்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு வழக்கிறிஞர் ஆஜரில்லை அவருடைய உறவினர் ஒருவரின் இறப்புக்காக அவர் சென்றுவிட்டார் என்பதால் தற்போது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று எதிரி சொன்னார்.

Ending Time: 3.50 PM.